# கிராமின் கிருஷி மவுசம் சேவா

இந்திய வானிலை துறை

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

**கோவை, தமிழ்நாடு**

## அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-06-2023**

**ராமநாதபுரம்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-06-17 | 2023-06-18 | 2023-06-19 | 2023-06-20 | 2023-06-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 4.0 | 4.0 | 3.0 | 2.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 37.0 | 37.0 | 36.0 | 36.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 27.0 | 27.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 70 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 40 | 60 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 10 | 10 | 10 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 230 | 180 | 270 | 272 | 230 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 8 | 8 | 7 | 7 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிக பட்ச வெப்பநிலையானது 35 முதல் 37 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்த பட்ச வெப்பநிலையானது 26 முதல் 28 டிகிரி செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். காற்றின் ஈரப்பதம் 40 முதல் 70 சதவீதம் வரை இருக்கக்கூடும். வானம் பெரும்பாலும் மேக மூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 8 முதல் 14 கிலோ மீட்டர் என்றளவில் தெற்கு மற்றும் மேற்கு திசை நோக்கி வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

தமிழ்நாட்டில் ஜூன் 21 முதல் ஜூன் 27 வரை மழை இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்த பட்சவெப்பநிலை இயல்பாக இருக்கும்.

### குறுஞ்செய்தி :

| |
|---|
| கறவை மாடுகளில் வெப்ப அயர்ச்சியால் பால் உற்பத்தி குறையும் அதனை தடுக்க நீர் தெளிப்பான் கருவியை கொட்டகையில் பொருத்தி பயன்படுத்த வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பருத்தி | பருத்தியில் மாவுப்பூச்சி தாக்கப்பட்ட இலையின் அடிப்புறத்தில், மெழுகு போன்று காணப்படும். இதனால் கரிப் பூசண வளர்ச்சியும் காணப்படும். தாக்கப்பட்ட செடிகள் வாடி, கருப்பு நிறமாக மாறும். இதனை கட்டுப்படுத்த எக்டருக்கு பின்வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கலாம். வேப்பெண்ணெய் 2% (20மிலி/லிட்டர்) அல்லது மீன் எண்ணெய் சோப் 25 கிராம் / லிட்டர் அல்லது புரோபெனோபாஸ் 800ml/ac தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னையில் காண்டாமிருக வண்டு பாதிப்பை தடுக்க நடுக்குருத்து பாகத்தில் (கொண்டை) மட்டை இடுக்குகளில் 3 அல்லது 4 அளவுள்ள அந்து உருண்டையை இட்டு மணலால் மூடவும் இதனை 45 நாட்களுக்கு ஒரு முறை இளம் கன்றுகளுக்கு மட்டை இடுக்குகளில் வைக்கவும்.ஒரு மண்பானையில் 5 லிட்டர் நீருடன் 1 கிலோ ஆமணக்கு புண்ணாக்கு சேர்த்த கலவையை தோப்பினில் வைத்தும் கவர்ந்து அழிக்கலாம். |
| தென்னை | தற்பொழுது நிலவி வரும் பருவ சூழ்நிலையில் தஞ்சாவூர் வாடல் நோய் வர ஏதுவாக உள்ளது. நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் வாடல், ஓலைகள் மஞ்சள் நிறமடைதல், வெளிச்சுற்று இலைகள் தொங்கி விடுதல் அதைத் தொடர்ந்து தண்டின் அடிப்பாகத்தின் வெடிப்புகள் வழியாக செஞ்சிவப்பு நிற சாறு கசிந்து திசுக்கள் அழுகி, தண்டின் அடிப்பகுதியும் அழுகிவிடும். இதனை கட்டுப்படுத்த 2 மில்லி ஹெக்சகோனசோல் உடன் 100 மில்லி தண்ணீர் கலந்து வேர் மூலம் (3 மாத இடைவெளியில் 3 முறை) செலுத்தலாம். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | நிலவும் வானிலையால் கால்நடைகளுக்கு ஏற்படும் நாவறட்சியினை போக்க போதிய நீரை பருக அளிக்கவும். வெப்பநிலை உயர்வாக காணப்படுவதால் கறவை மாடுகளுக்கு நாள் ஒன்றுக்கு தீவனத்துடன் 50 கிராம் டானுவாஸ் ஸ்மார்ட் தாது உப்புக் கலவையை அடர் தீவனத்துடன் கலந்து கொடுக்கவும். |

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பேபிசியோசிஸ் இது உண்ணிகள் கடிப்பதால் ஏற்படும் நுண்ணுயிர் தொற்று நோயாகும். நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளுக்கு காய்ச்சல் அதிகமாக இருக்கும், சிறுநீர், காப்பி நிறத்தில் வெளிவரும். இரத்தச்சோகை ஏற்பட்டு மாடு மெலிந்து 7-10 நாட்களில் இறந்துவிடும். இந்த நோய்களில் இருந்து மாடுகளை காப்பாற்ற உண்ணிகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | நிலவும் வானிலையால் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இந்நோயின் அறிகுறிகள் கோழிகள் தலையை ஒரு பக்கமாக சாய்த்து கொள்ளுதல், கழிச்சல் மற்றும் முட்டைகளின் எண்ணிக்கை குறைந்து இறப்பு ஏற்படும். இதனை தவிர்க்க கோழிகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தடுப்பூசி போடவும். |